# நலிந்தோர் நல்நோக்கு கொள்கை

சமூக சமத்துவத்திலும் மற்றும் சமூகத்தில் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய பிரிவுகளான, குறிப்பாக பட்டியல் இன மக்கள், பழங்குடியினர், மாற்றுதிறனாளிகள் மற்றும் விளிம்பு நிலை சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் (AA குழு) ஆகியோரை செயல்படுத்தும் மற்றும் அதிகாரமளிக்கும் வாய்ப்புகளை ஊக்குவிப்பதிலும் டாடா பவர், நம்பிக்கை கொண்டுள்ளது. பணியிடத்தில் காணப்படும் பன்முகத்தன்மை அதன் வணிகம், கூட்டாண்மைகள் மற்றும் எதிர்காலத் தயார்நிலை ஆகியவற்றை நேர்மறையாகப் பாதிக்கிறது என்பதை இந்த நிறுவனம் அங்கீகரிக்கிறது. இந்த சமூகத்தின் AA குழுவினரின் கல்வி, வேலைவாய்ப்புத் திறன், நிதி மற்றும் டிஜிட்டல் சேர்க்கை ஆகியவற்றை மேம்படுத்த, டாடா பவர் தனது பயிற்சி வளங்களை அதிகபட்ச அளவில் தன்னார்வத்துடன் வழங்கும். டாடா பவர், தொழில்முனைத்துவம் மற்றும் தொழில்துறை மதிப்புச் சங்கிலிகளில் உள்ளடக்கம் ஆகியவற்றிற்காக AA குழுக்களை அதிகாரமளித்து ஊக்குவிக்கும்.

**நலிந்தோர் நல்நோக்கு கொள்கையின் முக்கியக் கோட்பாடுகள்**

- டாடா பவர் நிறுவனத்தின் போட்டித்தன்மையானது, சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளின் நல்வாழ்வோடு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது என்பதை அங்கீகரிப்பதை நிறுவனம் உறுதிப்படுத்துகிறது.

- பன்முகத்தன்மை மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவை நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தும் உந்து சக்திகள் என டாடா பவர் நிறுவனம் நம்புகிறது.

- பணியிடத்தில் சமூக ரீதியாக பின்தங்கிய பிரிவுகளைப் பிரதிபலிக்கும் பன்முகத்தன்மையானது வணிகத்தில் நேர்மறையான தாக்கத்தை கொண்டிருக்கிறது என்கிற அங்கீகாரத்தை டாடா பவர் உறுதிப்படுத்துகிறது.

- டாடா பவர், தேவையான பயிற்சி மற்றும் திறன் உருவாக்கத்தை வழங்குவதன் மூலம் AA சமூகங்களின் திறன் நிலைகளை தரம் மேம்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுகிறது .

- AA சமூகங்களை ஆதரிக்க பொருத்தமான நிறுவனங்களுடன் டாடா பவர் இணைந்து செயல்படும்.

- சமூகத்தின் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கான சமமான வாய்ப்புகளை டாடா பவர் ஊக்குவிக்கும்.

**டாடா பவர் இன் வணிக கூட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பது வழக்கமான வணிக அளவுகோல்களின் அடிப்படையில் நடைபெறும். அனைத்து அளவுகோல்களும் சமமாக இருந்தால், AA குழுக்களைச் சேர்ந்த வணிக கூட்டாளர்களுக்கு இந்த நிறுவனம் சாதகமாக முன்னுரிமை அளிக்கும்.**

பிரவீர் சின்ஹா
தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர்

**தேதி: 14 ஜனவரி 2025**

TATA POWER
Lighting up Lives!